**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண். 243/2020**

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | தொழில் |
| த/பெ | முருகசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி விபரங்களை நான் சொல்லி தான் அதை தயார் செய்தார்கள். இந்த வழக்குக் கடனுறுதிச்சீட்டு 07.01.2018 தேதியில் எழுதப்பட்டது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கடனுறுதி சீட்டு அடிப்படையில் ரூபாய் 15 லட்சம் தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சாஆ.1 ல் குறிப்பிட்டுள்ள சாட்சிகளின் அடிப்படையில் என்னுடைய தகப்பனார் வாதியிடம் ரூபாய் 15 லட்சம் பெற்றுக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல அவ்வாறு வாங்கவில்லை. நான் என்னுடைய தகப்பனார் வாதியிடமிருந்து பெற்ற கடனை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் கடன் எதுவும் பெறவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனாருக்கு பல்லடம் தாலுக்கா ஆண்டிபாளையம் கிராமம் ரிசர்வே எண் 30/2 நிலத்தில் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தை நான் எனது

தாயார் எனது தங்கை ஆகியோர் பராமரித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான்.

2. நானும் எனது சகோதரியும் எங்களுக்கு திருமணம் ஆனது முதல் எங்களுடைய கணவருடன் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு நாங்கள் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான் வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் வேலை எதுவும் செய்யவில்லை வீட்டில் வேலை எதுவும் இல்லாமல் தான் இருந்தார். என்னுடைய தகப்பனார் ஆடு மாடுகள் வளர்த்தும் விவசாயம் செய்தும் பால் விற்பனை செய்தும் தொழில் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் செய்து வந்த தொழிலை ஒப்புக்கொண்டால் தாவா கடனை திரும்ப செலுத்த வேண்டும் என்பதற்காக அவ்வாறு தொழில் எதுவும் செய்யவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தைத் தவிர என்னுடைய தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் தற்போது இல்லை. என்னுடைய தகப்பனாருக்கு நிலையான வருமானம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல சிறிது வாடகை வரும். என்னுடைய தகப்பனாருக்கு எந்த சொத்தில் இருந்து வாடகை வருமானம் வருகிறது என்பது குறித்து என்னுடைய எதிர்வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை. என்னுடைய தகப்பனாரின் வாடகை வருமானத்தை காட்ட வாடகை சீட்டு மற்றும் வாடகை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. என்னுடைய தகப்பனார் 31.12.2019 ஆம் தேதி இறந்தார். வாதிக்கும் எனது தகப்பனாருக்கும் வரவு செலவு இருந்து விபரம் என்னுடைய தாயாருக்கு மட்டும்தான் தெரியும் என்றாலும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு நத்தக்கடையூர் கிராமத்தில் சொந்தமாக 13 ஏக்கர் விவசாய நிலம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி தன்னுடைய வழக்கறிஞர் மூலம் 03.03.2020 ஆம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி இருந்தார் என்று சொன்னால்

சரிதான். மேற்படி அறிவிப்பை என்னுடைய தாயாரும் மூன்றாம் பிரதிவாதியும் பெற்றுக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு தகவல் கொடுக்கப்பட்டு மேற்படி அறிவிப்பு திருப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதி அனுப்பிய அறிவிப்புக்கு என் தரப்பிலேயோ அல்லது என்னுடைய தாயார் தரப்பிலேயோ பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தந்தை யாருடன் என்ன வரவு செலவு செய்தார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் அவர் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்ததால் அவர் எந்தவிதமான வரவு செலவும் செய்யவில்லை.

4. என்னுடைய தகப்பனார் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரையில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பது குறித்து என்னுடைய முதல் விசாரணையில் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனாருக்கு காசநோய் இருந்தது ஆனால் அதற்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தகப்பனார் வாதியிடம் கடன் பெற்ற தேதியில் நல்ல உடல் நிலையில் இருந்தார் என்றாலும் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தந்தை வாதியிடம் பெற்ற கடனை எங்கள் குடும்ப நலனுக்காகவும் எங்களுடைய நலனுக்காகவும் தான் செலவு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளாகிய நாங்கள் இறந்து போன என்னுடைய தகப்பனாரின் சட்டபூர்வமான வாரிசுகள் என்பதால் அவர் பெற்ற கடனை நாங்கள் தான் திருப்பி செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு நீதிமன்றத்தில் இருக்கும் அசல் வழக்கு கடனுறுதி சீட்டை நான் பார்வையிடவில்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடைய தகப்பனாருடைய அல்ல என்று குறிப்பாக மறுக்கவில்லை என்றால் நான் அந்த ஆவணத்தை பார்வையிடவில்லை.

**5.** எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடைய அப்பாவுடையது அல்ல என மருத்து கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டின் அடிப்படையில் என்னுடைய அப்பா கடன் எதுவும் பெறவில்லை என்றும் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் மேற்படி கடனை திருப்பி செலுத்தக்கூடாது என்பதற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கடனை திரும்ப செலுத்துவதற்கு பிரதிவாதிகளாகிய எங்களுக்கு வசதி வாய்ப்புகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.16 19:23:36 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.